**மேலும் இலவச பிரதிகளுக்கும்**
**இலவச பத்திரிக்கை பிரதிகளுக்கும்**
**எங்களை தொடர்பு கொள்ளுங்கள்**





இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 14



- நற்செய்தியின் ஐசுவரியம்
- நீங்கள் அப்படி ஒன்றும் முதிர்ச்சி அடையவில்லை
- என் வாழ்வை மாற்றின நாட்கள்
- பெதஸ்தா குளத்தினருகே இயேசு ஒரு மனிதனைக் குணமாக்குகிறார்

### கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.


ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk



**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**

**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் மற்றும் சந்திர மோகன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**


இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.


இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# நற்செய்தியின் ஐசுவரியம்

"ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாக இருக்கிறது!" என்று இயேசு ஒரு முறை சொல்லிவிட்டு உடனே அவர் ஒரு உதாரணத்தை கொடுத்தார். *"ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார் (லூக்கா 18:24,25)".*



மனிதனால் முடியாத காரியங்கள் தேவனால் முடியும் என்பதனை நாடகபாணியில் சொன்னதாக திகழ்கின்றது. இவ்வாழ்வில், சம்பாத்தியம் பண்ணிவைத்திருக்கும் ஐசுவரியமானது, நற்செய்தியின் மெய்யான ஐசுவரியத்தை அடைவதற்கு அதனை கடினமான காரியமாக்கி விடமுடியும்? இப்பொழுது ஏன் இப்படி இருக்க வேண்டும்?

### உலக தொடர்பான ஐசுவரியம்

வேதாகமத்தில் முக்கிய பங்காற்றிய அநேகர் உலக பிரகாரமான காரியங்களில் சந்தேகத்திற்கிடமின்றி செழிப்பாய் இருந்தனர். நம்பிக்கையற்ற மனிதர்களாக அவர்கள் கருதப்படவில்லை. அவர்களில் அநேகர் எடுத்துக்காட்டாக பழையஏற்பாட்டில் ஆபிரகாம் மற்றும் தாவீது போன்றோர் விசுவாசமிக்கவர்களாகவும் தேவனுக்கு மிகவும் பிரியமானவர்களாகவும் இருக்கிறார்கள் என்று விவரிக்கப்பட்டுள்ளது. மாற்கு எழுதின நற்செய்தியில் இயேசுவின் வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டபோது அதில் அதிகபடியான ஒரு சுவையான செய்தி காணப்படுகின்றது.

*"பிள்ளைகளே, ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது!" (மாற்கு 10:24).*

அதுதான் மெய்யான முக்கிய விஷயமாகும்! ஐசுவரியம் உள்ளதினால் அல்ல,

தேவனிடத்தில் நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக அவைகளில் நம்பிக்கை வைத்திருப்பதில் தான் அபாயம் இருக்கிறது! பவுல் எழுதியவைகளிலிருந்து மேற்கோளாக எடுத்துக் கூறப்படும் மற்றொரு பிரபலமான, ஆனால் அடிக்கடி தவறாக மேற்கோள் காட்டப்படும் வசனம்:

*“பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது, சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்” **(1 தீமோத்தேயு 6:10).***

இவைகளைக் குறித்து தீமோத்தேயுவுக்கு அவர் எச்சரித்த வண்ணமாய் இருந்தார்: *‘‘ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்” **(6:9).***

அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பொருத்த அளவு, ஐசுவரியத்தைப் பற்றிய நேசம் அல்லது அதற்கான ஆசைதான் நாசத்துக்குள்ளும் மரண ஆபத்துக்குள்ளும் நடத்துகின்றது. ஐசுவரியவானாக மாறவிரும்பி வாரந்தோறும் ஏதாவது ஒருவகையான சூதாட்டத்திற்குச் செல்லும் பெருந்திரளான மக்களைப் பற்றி சிந்திப்போம்! ஆசையானது அதிக ஆசையை உண்டு பண்ணும், சுயநலமானது குற்றம் புரிய வழிநடத்தும். சரித்திரமானது அத்தகைய மகிழ்ச்சியற்ற முன்னேற்றங்களால் நிறைந்துள்ளது.

### அவை எனக்குரியது!

நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவதற்காக மிக ஆவலுடன் இயேசுவிடம் ஒரு வாலிபன் வந்தான். ஆனால் அவர் அவனைச் சோதித்தபோது விசனத்துடன் அங்கிருந்து சென்றுவிட்ட இந்த வாலிபனைக் குறித்து புதிய ஏற்பாட்டில் ஒரு கதை இருக்கிறது. நித்திய ஜீவனை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவன் கேட்டபோது, அதை அடைய வேண்டும் என்றால் செலுத்தப்பட வேண்டிய விலையை இயேசு அவனிடம் கூறினார்.

இயேசு அவனிடம் *“நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும், பின்பு என்னைப் பின்பற்றிவா”* என்றார். ஆனால் அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்த படியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய் விட்டான். *(மத்தேயு 19:21,22).*

சிறுவயது முதல் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டவனாக இருந்தும் - அவனது ஆஸ்திகளை - அவனுடையது என்று அவன் நினைத்த காரியங்களை இந்த நல்ல வாலிபன் விட்டுவிட விரும்பவில்லை. அவைகளை அவன் நம்பியதுபோல் தோன்றியது! தேவகற்பனைகளை அறிந்தவனாக இருக்கும் போது அவன் தேவனைத்தான் நம்பி இருந்திருக்க வேண்டும். தேவனிடம் அவன்






கொண்ட விசுவாசக் குறைவை, தோட்டத்திலிருந்த ஆதாமையும் ஏவாளையும் போல காட்டினான் - தேவன் அவர்களுக்குக் கொடுத்தவைகளில் மனநிறைவு இல்லாதவர்களாக இருந்து, கூடுதலாக ஆசைப்பட்டனர். மேலும் அந்த ஆசையானது அவர்களைப் பாவஞ்செய்ய வழிநடத்தியது.

### மண்ணுக்குத் திரும்பு

நாம் ஆடம்பரத்திலோ அல்லது வறுமையிலோ ஒரு பங்களாவில் அல்லது ஒரு சிறிய வீட்டிலோ நாம் வாழ்ந்தாலும் நமக்கு பழக்கமாகி விட்ட பொருட்களை நம்முடைய சொந்தமானது என்று நாம் அழைக்கிறோம். ஆனால் நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் எப்படி இலக்கை சென்றடையப் போகிறோம் என்பதையும் நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. நமது சம்பத்தைப்பற்றிய நற்செய்தியின் சத்தியமானது இதோ:

*‘‘போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்” **(1. தீமோத்தேயு 6:6-8).***

நாம் அனைவரும் உண்மையில் ஏழையாக இருக்கிறோம். ஏனெனில் பிணத்தை மூடும் ஆடையில் பாக்கெட் உள்ளது போல இருக்கிறது! நாம் போகும்போது நம்மோடு கூட ஒன்றையும் நம்மால் எடுத்துச் செல்லமுடியாது, ஏனென்றால் நம்முடையது அனைத்தும் நமக்கு இருப்பதும் மண்ணாகிப் போய்விடும். மரணமானது உண்மையில் எப்படி இருக்கும் என்று தேவன் விவரித்தபோது ஏதேன் தோட்டத்தில் தேவன் ஆதாமிடம் சொன்னது இதுதான்.

*“நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்” **(ஆதியாகமம் 3:19).***

உண்மை என்னவென்றால் நாம் சாப்பிட விரும்புவதாக இருந்தால் நாம் வேலை செய்தாக வேண்டும். ஆனால் நம் வேலை முடிந்ததும், தேவன் நம் சார்பாக செயல்படாவிட்டால், நாம் உயிரோடு இருப்பது முற்றுபெற்றுவிடும். மரணம் என்பது ஒரு உணர்வு இழந்த நிலை - கல்லறைக்குள் அழுகி அழிந்து போகும் செய்கையாக இருக்கிறது. ஆனால் தேவனால் மட்டுமே அந்த செயல் முறையினை பின்னோக்கித் திருப்பி அவருடைய வல்லமையினால் மரணத்திலிருந்து எழுப்பி மறுபடியும் நம்மை உணர்வடைந்த நிலைக்குக் கொண்டுவர முடியும்.

உயிர்த்தெழுதலின் மூலம் நம்மை மீண்டும் அவர் வாழவைக்க முடியும், அவர் அப்படி செய்யாவிட்டால் நாம் என்றென்றைக்கும் மரித்தவர்களாய் கடந்து போய்விடுவோம்!

### தேவனைச் சார்ந்திருத்தல்

நமக்குத் தேவைப்படும் அனைத்திற்காகவும் நாம் முழுவதுமாக தேவனை சார்ந்திப்பதை நம் வாழ்க்கையில் பின் தொடரும்போது அவர் நாம் வாழ்வையும் அனைத்து காரியங்களையும் நமக்குத் தருகிறார். துக்கமான காரியம் என்ன வென்றால் இந்நாளில் அநேக மக்கள் அவரில் நம்பிக்கை வைத்திருப்பது அநேகமாக இல்லை எனலாம். அவர்களது வாழ்க்கையின் இலக்குக் அவர்களே வல்லுநர்களாக இருப்பதாக எண்ணுகிறார்கள். அவர்களது உரிமைகளைக் குறித்து ஏராளமாக பேசுகிறார்கள். ஆனால் தேவனிடத்தில் அவர்களுக்கு இருக்கும் பொறுப்புகளைக் குறித்து ஒருபோதும் பேசுவதில்லை.

ஆகவே இவ்வாழ்வில் நாம் தேவனைப் பற்றி எண்ணாமல் இருப்போமானால், மரித்தவர்களை எழுப்பும்படியாக இயேசு வரும்போது வர இருக்கும் வாழ்வில் நம்மைக் குறித்து அவர் ஏன் சிந்திக்கவேண்டும்? என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் பொருளாகிய மெய்யான ஐசுவரியத்தை நாம் பெற்றுக் கொண்டோம் என்று நிச்சயப்படுத்திக் கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்?

முதலாவதாக, வேதாகமத்திலுள்ள அவருடைய வார்த்தையிலிருந்து தேவன் உங்களிடத்தில் பேசட்டும் அவர் என்ன சொல்ல இருக்கிறார் என்பதை நாம் கவனித்துக் கேட்போம். அவருடைய வார்த்தையை நீங்கள் படிப்பதின் மூலமாக தேவன் உங்களை அழைத்துக் கொண்டிருக்கிறார். கேட்பதற்கு நீங்கள் ஆயத்தமாய் இருக்கிறீர்களா? இங்கே தேவன் நம்மிடம் பேசிக்கொண்டும் நம்மை உற்சாகப்படுத்திக் கொண்டும் இருக்கும் ஒரு உதாரணத்தை வேதாகமத்தில் கவனிப்போம்.

*“ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள். பூமியின் குடிகளே, சிறியோரும் பெரியோரும் ஐசுவரியவான்களும் எளியவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் ஏகமாய்ச் செவிகொடுங்கள். என் வாய் ஞானத்தைப் பேசும், என் இருதயம் உணர்வைத் தியானிக்கும்” (சங்கீதம் 49:1-3).*

### தேவனிடமிருந்து வெகுமதிகள்

வாழ்க்கை என்பது தேவனிடத்திலிருந்து வந்த ஒரு வெகுமதியாக இருக்கிறது அதை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். வாழ்க்கை என்பது அனுபவிப்பதற்குத்தான் என்று நாம் கருதுகிறோம். ஆனால் தேவனையும் அவரது நோக்கத்தையும் அறிந்து கொள்வதற்காக அமைந்திருக்கும் ஒரு பிரதானமான / அடிப்படையான வாய்ப்பாக இருக்கிறது. அப்போதுதான் அவர் அருளும் நித்திய ஜீவனைக் குறித்தக் காரியங்களைக் கண்டுகொள்ள முடியும். தேவனுடைய வியக்கத்தக்க சிருஷ்டிப்பையும் ஒரு அற்புதமான உலகை உருவாக்கும்படி தேவன் நிறைவேற்றியிருக்கிற அனைத்து செயல்களையும் பற்றி எழுதிய ஞானமுள்ள



மனிதனான சாலொமோன் எழுதினான். *“மனுஷர் யாவரும் புசித்துக் குடித்து தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்” (பிரசங்கி 3:13).*

தேவனுடைய உலகில் என்ன அற்புதமான காரியங்கள் இருக்கின்றன? பறவைகளின் பாடல்கள், கதிரவன் மறையும் அற்புதங்கள், பூக்களின் வண்ணங்கள் என பெயரிட்டவைகள் ஒரு சிலதான். இச்செழுமையான வெகுமதிகளானது முழுமையான ரீதியில் மதிப்பீடு செய்யப்படவேண்டும். அப்போஸ்தலர் பவுல் இந்த வசனத்தில் சொன்னது போல ஏற்கனவே பலமுறை நாம் கவனித்து இருக்கிறோம்.

*“இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களா யிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும்'' (1. தீமோத்தேயு 6:17).*

நாம் அஜாக்கிரதையாகவும், சுயநலமாகவும் வாழுவதற்காக இக்காரியங்கள் நமக்குக் கொடுக்கப்படவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் மூலம் தேவனிடத்தில் தங்களை ஏற்கனவே அர்ப்பணித்து விட்ட மக்களுக்குப் பவுல் எழுதிக் கொண்டிருந்தார். அவர்கள் இயேசுவை பின்பற்றினவர்கள். நீங்களும் கூட அப்படி இருக்க விரும்பலாம். ஆகவே தேவனிடத்தில் அவர்களுக்கு இருக்கவேண்டிய பொறுப்புகளைக் குறித்து பவுல் அவர்களுக்கு நினைப்பூட்டி தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார். *“நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரண குணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிகொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு” (1. தீமோத்தேயு 6:18,19).*

ஐசுவரியத்தின் நிலையற்ற தன்மைக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனின் நிலையான தன்மைக்கும் இடையே என்ன ஒரு வித்தியாசம்; உண்மையும் கீழ்ப்படிதலுமுள்ளவர்களுக்கு என்ன அருமையான வாக்குத்தத்தம்! அந்த ஐசுவரிய முள்ள வாலிபன் தேடிக்கொண்டிருந்த அதேபோன்ற நித்திய ஜீவனானது இந்த உண்மையுள்ள விசுவாசிகளுக்கும் வாக்களிக்கப்பட்டதாக இருக்கிறது.

### நித்திய ஜீவன்

புரிந்து கொள்வதற்கான முதல் காரியம் என்னவென்றால் நித்திய ஜீவன் (அல்லது அழியாமை) என்பது அதிகாரத்தினால் நமக்குச் சொந்தமாக்கி கொள்ள முடியாது. நாம் இறக்கக்கூடியவர்களாக பிறந்தோம், ஆகவே மரணமற்ற வாழ்வைப் பொறுத்த அளவு நாம் ஆதரவற்றவர்களாக இருக்கிறோம். நமது அமைப்பின் ஒரு பகுதியாக ஒரு அழியாத ஆத்துமா நமக்கு உண்டு என்று வேதாகமம் ஒரு நிமிடங்கூட வேடிக்கைக் காட்டவில்லை. ஒரு முடிவே இல்லாததாக அல்ல, ஒரு

உயிருள்ள ஆத்துமாவாக மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான் என்று வேதாகமம் சொல்லுகிறது. விரைவிலோ அல்லது பின்னரோ நாம் ஒரு மரித்த ஆத்துமாவாக மாறுகிறோம். அதற்கான காரணத்தை வேதாகமமானது வழவழ என்று ஒளித்துக் கூறாமல் இவ்வாறு கூறுகிறது. பாவத்தினால் நாம் மரிக்கிறோம். *"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23).*

அப்படியானால், ஏன் "நித்திய ஜீவன்" பற்றி பேச வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். அதன் முழுமையான மேற்கோள் இங்கே இவ்வாறு இருக்கிறது:

*"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23).*

தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் இந்த இலவச வெகுமதியே நற்செய்தியின் மையச்செய்தியாக இருக்கிறது. இது ஒரு வெகுமதி; நாம் ஒரு போதும் இதனை சம்பாதித்துக்கொள்ள முடியாது - இதைத்தான் அந்த ஐசுவரிய வாலிபன் கற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது. இது தேவகிருபையின் விளைவாக இருக்கின்றது. அதனை அடைவதற்காக நம்மையே தகுதிப்படுத்திக்கொள்ள முடியாது. தேவனுடைய வெகுமதியை நிராகரிப்பதற்கு உண்மையில் சாத்தியம் உண்டு, ஆனால் அதைக் குறித்து எச்சரிக்கையாக நீங்கள் சிந்திப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஏழையோ அல்லது ஐசுவரியவானோ நம்முடன் உள்ளவர்களைப் பார்க்கிலும் நாம் மிகச் சிறந்தவர்கள் அல்ல என்று அறிந்து உணர்ந்து கொள்வதே முதல் படியாக இருக்கிறது. நாம் உதவியற்றவர்களாகவும் ஒன்றும் அற்றவர்களாகவும் இருக்கிறோம் என்று நம்மையே பார்க்க வேண்டும். இவ்வாழ்வில் எந்த பொக்கிஷங்களை நாம் சேர்த்து குவித்துவைத்தாலும் அதனால் ஒரு பலனும் இல்லை. ஆகவேதான் இயேசு சொன்னார்.

*"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்தேயு 6:19-21).*

அதற்குப் பதிலாக, *"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33)"*. என்று இயேசு சொன்னார்.

**நமது உண்மையான தேவை**

வேதாகமத்தை நம்மிடம் பேச அனுமதிப்போமானால் நம் வறுமையை பாவ அறிக்கை செய்ய வேண்டிய தேவையை நாம் பார்ப்போம். மேலும் கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் பலியினால் பாவங்கள் மூடப்படும் பரிகாரத்தை நாம் ஏற்றுக்



கொள்ளலாம். புது பிறப்புக்கு ஒரு அடையாளமாக இருக்கும் ஞானஸ்நானத்தை எடுக்க வேண்டிய தேவையை நாம் புரிந்து கொள்ளுவோம். ஞானஸ்நானமானது வாழ்க்கையில் ஒரு புதிய ஆரம்பத்தை உருவாக்கும். தேவன் கொடுத்த ஒரு வழியாகவும், கிறிஸ்துவோடு மரித்ததற்கு ஒரு அடையாளமாகவும் இருக்கிறது. அப்போதுதான் நாம் வரப்போகும் தேவ ராஜ்யத்தில் என்றென்றைக்கும் அவருடன் வாழ முடியும்: *"ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்" (ரோமர் 6:8).*

இந்தத் தெளிவான அறிவுக்குள் விசுவாசிகள் வரவேண்டும் என்று அப்போஸ்தலரின் பவுல் ஜெபிப்பதில் ஆச்சர்யம் இல்லை:

*"தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் (எபேசியர் 1:18)". அறிய வேண்டும்.*

**- ராய் வாடுப்**

# நீங்கள் அப்படி ஒன்றும் முதிர்ச்சி அடையவில்லை

"கிழட்டு நாய்களுக்குப் புது வித்தைகளைச் சொல்லிக்கொடுக்க முடியாது'' இப்படி தரக்குறைவான கூற்றைக் கூறுபவர்களை விட புத்திசாலிகளான நாய்கள் இருப்பதைக் கண்டிருக்கிறோம்.



இந்த தரக்குறைவான கூற்றை வயதானவர்களைப் பற்றிக் கூறும்போது பயன்படுத்தினால் அது அநியாயம். அவர்களும் கூட ஏதாவது புதியதைக் கற்றுக் கொள்ளமுடியாத அளவிற்குத் தங்களுக்கு வயதாகி விட்டதாக நினைக்கலாம். உண்மை என்னவென்றால், சில மக்கள் புதியனவற்றைக் கற்றுக்கொள்ள எப்போதுமே இளமைத் துடிப்புடன் இருக்கிறார்கள். கற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு மூப்படைவதில்லை. தேவையானதெல்லாம் உழைப்பும் மனஉறுதியும் தான். நீ உண்மையாகவே ஒன்றைச் செய்ய விரும்பினால், உன்னால் அதைச் செய்ய முடியும்.

## பதினாறா அறுபதா ?

முற்காலத்தை விட மக்கள் இப்போது நீண்ட காலம் வாழ்கிறார்கள். மற்றவயதினரை விட புதிய காரியங்களை முயன்று பார்க்கவும், புது யுக்திகளைக் கற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு அதிக நேரம் இருக்கிறது. அவர்கள் அதிக மும்முரமாய் வேலை செய்வதில்லை, ஆனாலும் வேலை செய்து கொண்டுதான் இருப்பார்கள். அவர்களைப் பற்றி, 'வயதாகிவிட்ட மனிதர்', 'புதிதான ஒன்றைக் கற்றுத் தேர்ச்சிபெற மூளையின் சக்தி குறைவு' போன்ற பிதற்றல்களைக் கேட்க அவர்கள் விரும்புவதில்லை.

பிரிட்டனில் பதினாறு வயதினரை விட அறுபது வயதினரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகவே, பல விஷயங்களில் அவர்கள் ஆற்றல் பெற்றவர்களென சமுதாயம் உணரத் தொடங்கியுள்ளது.

நாம் இப்போது வாழ்வதைவிட, ஒரு காலத்தில் மக்கள் மிக நீண்ட காலம் வாழ்ந்தார்கள். நோவாவின் காலத்தில் உலகமெங்கும் பெருவெள்ளம் வந்தபோது, வரலாற்றுப் பதிவேடுகளின் படி, சுற்றுப்புறக் காற்றுமண்டலம் வேறு விதமாயிருந்தது, மக்கள் பல நூற்றாண்டுக் கணக்கில் ஒவ்வொருவரும் வாழ்ந்தார்கள். ஆனால் அந்தப் பெருவெள்ளக் காலத்திற்குப் பின் மனிதவாழ்க்கை குறைவான அளவினதாய், சராசரி 120 ஆண்டுகள் இருக்கும் என தேவன் குறிப்பிட்டார் (ஆதியாகமம் 6:3).

**எடுத்துக்காட்டாக:**

**ஆபிரகாம்** 175 ஆண்டுகள், இறுதி வரை பலசாலியாக இருந்தான். (ஆதியாகமம் 25:7)

**ஈசாக்கு** 180ம் வயதில் மரித்தான் (ஆதியாகமம் 35:28).

**யாக்கோபு** 147வயது (ஆதியாகமம் 47:28) யோசேப்பு 110 வயது (ஆதியாகமம் 50:22)

**மோசே** 120 வயது. (உபாகமம் 34:7)

இந்த மேன்மக்கள் யாவருமே தங்கள் மரணம் வரை நல்ல விசுவாசிகளாயிருந்தார்கள். யாக்கோபு தன் மகன்கள் மீதும் அவர்களின் சந்ததியினரின் மீதும் தீர்க்கதரிசன ஆசீர்வாதத்தைக் கூற முடிந்தது. யோசேப்பு தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளை கொடுத்தான். அவன் எகிப்திலல்ல, எபிரோனில் அடக்கம்பண்ணப்பட விரும்பினான். (மோசே மரிக்குமுன் மக்களுக்குச் செய்த பிரசங்கங்களின் தொகுப்பு தான் உபாகமம்).

## வரையறுக்கப்பட்ட ஆயுசு

இப்பொழுது இருப்பது போல ஆயுட்கால எதிர்பார்ப்பு குறைக்கப்பட்டதாக தேவனால் மோசேயிடம் கூறப்பட்டது. மனிதவாழ்க்கையை ஏன் தேவன் குறைக்கத் தீர்மானித்தார் என்பது நமக்குச் சொல்லப்படவில்லை. ஒருவேளை எகிப்திலிருந்து





மோசேயுடன் வந்தவர்கள் தங்கள் சந்தர்ப்பங்களை வீணடித்துக் கொண்டு தேவனற்றவர்களாய் பொறுப்பற்றவிதமாய் வாழ்ந்து கொண்டிருந்ததால் இருக்கலாம். காரணம் எதுவாயிருப்பினும், தேவனுடைய ஆவியின் தூண்டுதலால் மோசேயால் எழுதப்பட்ட ஜெபத்தில் இவ்விதம் கூறுகிறார்.

*"எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப் போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம். எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே, அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம்" (சங்கீதம் 90:9,10).*

சீனாய் வனாந்தரத்தில் மக்கள் 38 ஆண்டுகள் அலைந்து திரிந்தபோது பட்டம் பறக்கவிடுவது எல்லாருக்கும் பிரியமான பொழுது போக்காயிருந்திருக்கலாம். மோசே அதைப் பயன்படுத்தி, நாம் உயிரோடிருக்கும் காலம் முடிவுறும்போது நடக்கப்போவதை விவரிக்கிறார். மனித வாழ்க்கைக்கயிறை மரணம் 'பட்' டென்று அறுத்துவிடுகிறது. நாமும் போய்விடுகிறோம் - நினைவற்றவர்களாய், அறிவற்றவர்களாய், உணர்வற்றவர்களாய், 120 ஆண்டுகள் கூட இல்லை, 70-80 ஆண்டுகள் வாழ்க்கை இருக்கும் என மோசே விவரிக்கிறார்.

## கர்த்தரைத் தேடுங்கள்

பல சந்ததிகளுக்குப் பின்னர் கிரீஸிலுள்ள அத்தேனே பட்டணத்து மெய்யறிவியலாளர்களிடம் (தத்துவ ஞானிகள்) நாம் தேவனைத் தேடவும் அவர் தரும் முடிவில்லா நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்வதை அறிந்து கொள்ளவும் பயன்படுத்துவதற்குத் தான் நமக்கு வாழ்க்கை கொடுக்கப்பட்டிருக்கிறது எனக்கூறினார், பவுலடியார்.

*"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே*

*தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்'' (அப்போஸ்தலர் 17:26,27).*

அவருக்குக் கிடைத்த பதில் என்னவென்று நினைக்கிறீர்கள்? பவுல் அவர்கள் கலாசாலைகளில் கற்காதவர், அவர்கள் கலாச்சாரத்தைச் சேராத எபிரெயன்! இன்னொரு நாளில் கேட்கலாம் எனப் பரிதவிப்பது போலக்கூறி அவனை அனுப்பிவிட்டார்கள். பதிவேடு மேலும் கூறுகிறது.

*“இப்படியிருக்க, பவுல் அவர்களை விட்டுப் போய்விட்டான். சிலர் அவனைப் பற்றிக்கொண்டு விசுவாசிகளானார்கள். அவர்களில் மார்ஸ்மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியொனீசியு என்பவனும், தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும், இவர்களுடனே வேறு சிலரும் இருந்தார்கள்'' (அப்போஸ்தலர் 17:33,34).*


அதைத் தான் தேவனும் விரும்புகிறார் - ஆண்களும் பெண்களும், அவர்கள் சமூக அந்தஸ்து மற்றும் வளர்ப்பு எப்படியிருந்தாலும் அவருடைய வாக்குத்தத்தங்களை நம்ப மனதுடையவர்களாயிருக்க வேண்டும். ஒவ்வொரு தலைமுறையிலும் ஒரு சிலரே அப்படி இருப்பார்கள். வேதாகமக் காலத்தில் அப்படி இருந்தது, இன்றும் அப்படித்தான் இருக்கிறது. தேவன் எண்ணிக்கையைக் குறித்து ஒருபோதும் கவலைப்படுகிறதில்லை. ஆனால் விருப்பம் முக்கியம், முக்கியமான காரியம் என்னவெனில், ‘‘கர்த்தரைத் தேடுவதற்கான'' நம் மனவிருப்பம்.

**பிந்திப் போகவில்லை:**

தியொனீசியு, தாமரி மற்றும் பிறருக்கு வயதாகிக்கொண்டே போயிருக்கலாம். அதைப்பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் ஒன்று தெளிவாயுள்ளது; இன்றைய உலகில், அப்போது போலவே, இப்போதும், உங்களுக்கு வயதாக, ஆக மரணமும் அதன்பின்னுள்ள வாழ்க்கையும் உங்களைச் சிந்திக்க வைக்கின்றன.

நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மரணப்படுக்கை அனுபவம் சம்பவிக்கும். ஆகவே ஒரு சிறப்பான வாழ்க்கை பெற்றுக் கண் விழிப்போம் என்று நினைக்க ஆசைப்படுவோம். அது நடக்கவேண்டுமாயின், இப்பொழுது நமக்கிருக்கும் தருணத்தைப் பயன்படுத்தி தேவனோடு நம் வாழ்க்கையை சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவனோடு நாம் சமாதானம் செய்துகொள்ளவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக ஆவதற்கும் காலம் ஒருபோதும் பிந்திப் போகவில்லை. இதை எவ்வளவு சீக்கிரம் செய்ய ஆரம்பிக்கிறோமோ, அந்த அளவிற்கு நமக்கு நல்லது.





# என் வாழ்வை மாற்றின நாட்கள்

**நேபுகாத் நேச்சார்**

இத்தொடரில் சிந்தியா மைல்ஸ் அவர்கள் நமக்கு வேதத்தில் உள்ள சில கதா பாத்திரங்களின் எண்ணங்களையும் நோக்கங்களையும் குறித்த ஒரு ஆழமான அறிவை தருகின்றார்கள். இம்மாதம் அவர்களின் தலைப்பு புராதன சரித்திரத்தில் உள்ள வல்லமையான மனிதர்களில் ஒருவரும் - பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் அதிபதி யுமானவனின் காலத்தில் ஒரு பெரிய வல்லரசாகவும் சுயேச்சை அதிகாரம் செலுத்திய பேரரசராலும் ஆட்சி செய்தவன்கூறுவது:

**வல்லமையான பேரரசன்**

நீங்கள் கடினமான குணாதிசயமுள்ளவராக இல்லையெனில் உங்களால் மிகவல்லமையுள்ள ஒரு மனிதனாக இவ்வுலகத்தில் ஆகமுடியாது. மேலும் அறியப்பட்ட உலகெங்கிலும் நான் மிகவல்லமையான ஒரு நபர். என்னிடம் சகலமும் உள்ளது, ஜெயித்து கிடைக்கப்பெற்ற ஒரு சாம்ராஜ்யம், வலுவான பொருளாதாரம், அலங்காரமான சம்பத்தும் வல்லமையும், வெறும் மாளிகைகள், பிரமிக்கத்தக்க தொங்கு தோட்டங்களும் மட்டுமல்லாமல், அநேக நாடுகளில் உள்ள ஒவ்வொரு மக்களின் வாழ்க்கை முறையைக் கட்டுப்படுத்தும்படியானதொரு வல்லமையும் உண்டு. சுருக்கமாக சொல்லவேண்டுமெனில், உயிருடன் இருப்பவர்களில் நானே மிகவல்லமையான ஒரு மனிதன். ஆயினும் நான் கற்றுக்கொண்ட ஒரு கடினமான பாடம் என்னவெனில், என்னைவிட மேலான ஒரு வல்லமை உண்டு என்பதை நான் அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதே.

எனது அரமனையிலே தானியேல் வெகுகாலமாக இருந்து வருகிறான். யூதராஜகுலத்தவரில் ஒருவனாகிய அவன் பத்தாண்டு காலங்களுக்கு முன்னர் நாங்கள் ஜெயித்த யூதேயா என்றதொரு சிறிய ராஜ்யத்திலிருந்து என் அரமனைக்குக் கொண்டு வரப்பட்டவன். அவன் சீக்கிரத்தில் பிரசித்தி பெற்றவனானான். எப்படியெனில் நான் கண்ட ஒரு சொப்பனத்தையும் அதின்

அர்த்தத்தையும் என் அரமனையில் இருந்த ஜோசியர்களால் அறிவிக்கக்கூடாமல் போனபோது அவனால் அறிவிக்க முடிந்தது.

தானியேல் கூறினான், ''யூதர்களின் பரலோக தேவனே அவனுக்கு அவையெல்லாவற்றையும் வெளிப்படுத்தினார்.'' அப்பொழுதிலிருந்து நாங்கள் இருவரும் கலந்துரை யாடுவதுண்டு. மேலும் அவன் என்னுடைய அரமனையில் ஒரு அரசியல் தலைவனானான். அவன் சாந்தமும் அகம்பாவ மில்லாதவனுமாகம் இருந்தான். அவன் தன் மதவழிபாடுகளில் நாட்டமுள்ளவனும் அதிகம் தியானம் செய்பவனுமான ஒருவன்.

**தீக்கனவு**

இம்முறை தானியேலை நான் அழைத்தனுப்பினது ஒரு கனவு மாத்திரமல்ல, அது ஒரு பயங்கரமான தீக்கனவு என் தேசத்தின் நடுவிலே மிகப்பெரிய மரம் ஒன்று இருந்தது. ஆகாயத்தையும் காணக்கூடாத அளவிற்கு பெரியது, அது மிக வலுவானதாகவும், அழகான பசுமையான இலைகளால் நிறைந்ததாகவும், அதிகமான கனிகள் நிறைந்ததாகவுமிருந்தது. பறவைகள் அதின் கிளைகளில் பாடிக்கொண்டும், அநேகம் பிராணிகள் அதின் நிழலின்கீழே ஒதுங்கும் படியும் இருந்தது.

திடீரென்று நான் ஒரு குரலைக் கேட்டேன், அது அந்த மரத்தை முற்றிலும் அழிக்கும்படியும் வெண்கலத்தாலான அதின் அடிமரத்தை மட்டும் வயலின் நடுவில் விட்டுவிடும்படியும் கட்டளை இட்டது. பின்னர் அத்தீக்கனவு மாறி, ஆகாயத்து பனியில் நனைந்து மிருகங்களுடனும் தாவரங்களுடனும் ஏழுவருடம் சேர்ந்து வாழ்ந்த பின்னர் தேவனே மனிதருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்பவர் என்பதை அறிந்துக் கொள்ளவேண்டிய ஒரு மனிதனைக் குறித்துப் பேசியது. நான் திகிலடைந்து, விழித்து உபயோகமற்ற எனது ஜோசியர்களை உடனே அழைத்துவர ஆட்களை அனுப்பினேன். தானியேலை மறுமுறை அழைக்கவேண்டிய நேரம் வந்தது.

தானியேல் சற்று நேரம் அமைதியாக இருந்தான். நான் நினைக்கிறேன், அவன் அந்த கனவை விளங்கிக்கொள்ள முடியாததால் அல்ல, அதின் அர்த்தத்தை எனக்கு கூறுவதில் விருப்பமற்றவனானான் என நான் எண்ணுகிறேன். நான் எனது அன்பைக் காண்பித்து அவனது பயத்தைக் அகற்றிய பின்னர் அக்கனவு என் சம்மந்தமானது என்றும், அது என் பகைவரை மகிழவைக்கும் எனவும் கூறினான்.

நானே அந்த மரம், என் ராஜ்யத்தின் வெற்றியும் அதிகாரமும் எனது ஆளுகையின் பொழுது கிடைக்கப்பெற்ற செழிப்பாகும். தானியேல் முன் அறிவித்துக் கொண்டிருந்தது எனது வீழ்ச்சியைக் குறித்தாகும், அது, எனக்கு உண்டானதெல்லாம் அல்லது கிடைத்ததெல்லாம் பரலோகத்தின் மகாபெரிய தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை எனது அகங்காரத்தினிமித்தம் நான் உணராமல் இருந்ததற்காக அவனுடைய தேவனிடத்தில் இருந்து கிடைத்த




தண்டனை என்றான்.

**பயங்கர அனுபவம்**

நான் சிறிது காலம் தானியேலின் அறிவுரைபடி நடக்க முயன்றேன். ஏழைகளுக்கு உதவியும், கரிசனையோடும் இருந்தேன். ஆனால் சில மாதங்கள் சென்றபின்னர் நானும் அந்தக் கனவை மறந்துப் போனேன். ஒரு நாள் காலை, எனது அழகிய தோட்டத்தில் என் சாதனைகளைக் குறித்து சிந்தனை செய்துக் கொண்டிருந்தேன். பெருமை கொள்ள அநேக காரியங்கள் இருந்தன. "பாருங்கள், நான் எவ்வளவாக சாதித்திருக்கிறேன்" என்று உரத்த சத்தமாய் கூவினேன்.

இந்த வார்த்தை என் வாயிலிருந்து வெளிவரும் முன்பே வானத்திலிருந்து ஒரு குரல் ''அதிகாரம் உன்னிடமிருந்து எடுக்கப்பட்டது'' என்றது. அதின் பின்னர் என்ன நிகழ்ந்தென்று எனக்கு அவ்வளவாகத் தெரியவில்லை.



இப்பொழுது என்னிடம் சொல்லப்படுகிறது, நான் உடனே பயித்தியமாகி, வெளியில் சென்று மிருகங்களுடன் அவைகளைப்போல வாழவேண்டும் என்று கட்டாயம் படுத்தியதாகவும், இப்படி ஏழு வருடங்கள் நான் அரசாள முடியாமல் போனதாகவும் கூறினார். நான் நிச்சயமாகக் கட்டுப்படுத்தப்பட்டதாக கூறினர்.

இப்பொழுது நான் மனமாற்றம் அடைந்துள்ளேன். என் அதிகாரம் திரும்ப கிடைத்தது. ஆனால் என் நோக்கமெல்லாம் மாறினது. நான் முழுதும் அகங்காரத்தில் இருந்ததினால் தண்டிக்கப்பட்டது தெரியவந்தது. தேவன்தாமே மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து ஜனாதிபதிகளையும், பிரதம மந்திரிகளையும், பேரரசர்களையும் ஏற்படுத்தி தமக்குச் சித்தமானவர்கள் ஆளுகை செய்யவும் தமக்கு சித்தமில்லாதவர்களை ஆளுகையிலிருந்து அகற்றுகிறவர். நாமே அவருக்கு உத்தரவாதம் தரவேண்டுமே ஒழிய அவர் நமக்கல்ல. தானியேல் அவரைப் பற்றி நான் இன்னும் அதிகமாய் புரிந்துகொள்ள உதவி செய்தான். எனவே நான் நீதியும் சத்தியமுமுள்ள பரலோக தேவனை மகிமைப் படுத்துகிறேன்.

எனது உள்நோக்கத்தை சவாலிட்ட குரலைக் கேட்ட அந்நாளே, மனிதன் எவ்வளவு வல்லமையுள்ளவனாக இருந்தாலும், அவன் ஒன்றுமில்லையென நான் கற்றுக்கொண்ட நாளாகும்.

**- சிந்தியா மைல்ஸ்**

# பெதஸ்தா குளத்தினருகே இயேசு ஒரு மனிதனைக் குணமாக்குகிறார்



பெதஸ்தா என்ற பெயருக்கு "இரக்கத்தின் வீடு'' என்று அர்த்தம். அந்தப் பெயர் இவ்விடத்திற்கு மிக பொருத்தமாகும். ஏனெனில் அங்குதான் இயேசு ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். இதெல்லாவற்றையும் நீங்கள் யோவான் 5ஆம் அதிகாரம் 2-9 வசனங்களில் வாசிக்கலாம்.

பெதஸ்தாவில் நிகழ்ந்தது, இயேசு மற்ற இடங்களில் செய்த அற்புதங்களை விட வித்தியாசமானது. அது எருசலேமின் ஒருவாசல் அருகே இருந்தது. அந்த இடத்தில் ஒரு குளம் இருந்தது. ஆரோக்கியமாவதற்காக ரோமர்கள் சென்று குளித்த சமயத்தில் அந்த குளத்தைச் சுற்றிலும் அநேக வியாதியஸ்தர்களும், குருடரும், முடவர்களும், சூம்பின உறுப்புடையவர்களும் "தண்ணீர் எப்பொழுது கலங்கும்" என்று காத்திருந்தார்கள். (வசனம் 3) இந்த மக்கள் ஒரு விசுவாசத்தைக் கொண்டிருந்தார்கள் அது *"ஏனெனில் சிலசமயங்களில் தேவதூதன் ஒருவன் அந்த குளத்தில் இறங்கி, தண்ணீரை கலக்குவான். தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்பட்ட வியாதிஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்"* (5:4).

வேதத்தில் வேறே எந்த இடத்திலும் இதற்கான ஆதாரம் இல்லை.



மூடநம்பிக்கை அந்த ஏழை மக்கள் மத்தியிலே வலுபெற்று அவர்கள் சுகமாவதற்கு ஒரு வழியாகும் என நினைக்க வைத்தது.

**முப்பத்து எட்டு வருட வியாதி:** இயேசு முதலாவது முப்பத்து எட்டுவருடமாக அங்கு வியாதியோடு இருந்த ஒருவனிடத்தில் உரையாடலை துவக்கினார். அவர் அவனை நோக்கி "சொஸ்தமாக வேண்டும் என்று விரும்புகிறாயா?" எனக் கேட்டார். இந்த மனிதனுக்கு இயேசுவைப் பற்றி எதுவும் தெரியாது. இவர்கள் ஒரே இடத்தில் படுத்து இருந்ததால், நாட்டில் நடைபெறும் எந்த செய்தியும் அறியாதிருந்தார்கள். எனவே அவன் இயேசுவிடம் இவ்விதமாக பதில் அளித்தான். *தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை. வேறொருவன் முந்தி இறங்கிவிடுகிறான்"* இயேசு அவனை நோக்கி *"எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட"* என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை (ஒரு சிறிய மெத்தை) எடுத்துக்கொண்டு நடந்தான் (வசனம் 9). இந்த அற்புதம் ஒரு ஓய்வுநாளன்று செய்யப்பட்டது. இவ்விதமாக அம்மனிதனின் விலையேறப்பெற்ற நம்பிக்கை நிஜமானது, தேவதூதனுடைய வருகையோ, தண்ணீர்கலக்கப்படுதலோ, யார் முந்தி இறங்கவேண்டும் என்ற போட்டியோ எதுவும் இல்லை.

இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட தேவவல்லமையால் நோய்களை சுகமாக்கும் அற்புதம் நிகழ்ந்தது.

**ஓய்வு நாளின் கருணை:** அநேக தருணங்களில் இயேசு வியாதியஸ்தரை குணமாக்குமுன்னால் அவர்களைச் சுகமாக்க முடியும் என்று விசுவாசிக்க வேண்டுமென எதிர்பார்த்தார். ஆனாலும் இந்த நிகழ்ச்சியில் இயேசு அவ்விதம் செய்யவில்லை, மேலும் பெதஸ்தாவின் அருகே அந்த ஐந்து மண்டபங்களில் வியாதியினால் வேதனையுடன் இருந்த வேறே எந்த வியாதியஸ்தரையும் அவர் சுகமாக்கவில்லை. ஒரு முக்கியமான பிரச்சனையை குறிப்பாக யூத மததலைவர்களின் நன்மைக்காக அவர் சரிசெய்ய விருந்ததார்.

பிரச்சனை என்னவென்றால் நன்மை செய்வது நியாயம். அதில் வியாதியஸ்தரை ஓய்வுநாட்களில் சுகமாக்குவதும் அடங்கும் என்பதே. யூத மதத்தலைவர்களின் தீர்க்கமான எண்ணம் என்னவென்றால், வியாதியஸ்தரை ஓய்வு நாளில் சுகமாக்குவது 'வேலை' என்றும் அது பத்துக் கற்பனைகளில் ஒரு கற்பனையை மீறுவதாகும் என்பதே. எனவே அம்மனிதன் தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்த சிறிது நேரத்திலேயே அவனைக் கண்டு *"இது ஓய்வுக் நாளாயிருக்கிறதே. படுக்கையை எடுத்துக் கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல என்றார்கள்"* (வசனம் 10).

*“அவன் பிரதியுத்தரமாக: என்னை சொஸ்தமாக்கினவர் உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவென்று எனக்கு சொன்னார் என்றான்.”* அவன் கூறினது அவன் படுக்கையோடு அவன் வீட்டிற்கு போக வேண்டும் என அவனுக்கு சொல்லப்பட்ட முடவன் ஒருவனை ஓய்வுநாளில் சுகமாக்குவது நியாய மெனில் அவன் தன் படுக்கை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போவதும் நியாயமே.

**ஓய்வு நாளின் கட்டளை:** ஓய்வுநாளைக் குறித்து கற்பனை உண்மையிலே கூறுவது என்ன**?** இங்கே இருக்கிறது.

*“ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலை செய்து உன்கிரியைகளை யெல்லாம் நடப்பிப்பாயாக.*

*“ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். அதிலே நீயானாலும் உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக் காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.*

*“கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்.” (யாத்திராகமம் 20:8-11)*

‘‘வேலை’’ என்னும் பதத்தின் விளக்கம் *வேலியராகமம் 23:7-8* “சாதாரணமான” (ஆதரைஸ்ட் வர்ஷன்) என்ற பெயரெச்சத்துடனும் (புதிய கிங்ஜேம்ஸ் வர்ஷனில்) “வழக்கமான” என்ற பதத்துடனும் விளக்குவதற்காக இங்கு பெயரெச்சம் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் லேவியராகமம் 23-ல் குறிப்பிடப் பட்டுள்ள வேலைப் ஆசாரியர்களும் லேவியர்களும் செய்வதாகும் சில வேளைகளில் அது ஓய்வுநாட்களிலும் செய்யப்பட வேண்டியதாக இருந்தது. இந்த கடமைகள், கற்பனை ஓய்வுநாளில் செய்யக்கூடாது என்று தடைவிதிக்கின்ற ‘வேலை’ யினின்று விலக்கப்பட்டுள்ளது.

இதை அறிந்துக்கொண்டதால் ‘வியாதியஸ்தரைக் குணமாக்குதல்’ எந்த ‘வேலை’யின் கீழ்வரும் என நாம் முடிவு செய்யலாம். நிச்சயமாக அது ‘சாதாரணமான’ ‘அலுவல்’ என்பதைப் போன்ற வேலை அல்ல. எனவே அதை ஆசாரியர்களால் செய்யப்பட்ட மற்ற வேலைகளைப் போல “பரிசுத்தமானது” என்று தரப்படுத்த வேண்டும்.

இயேசு ஏன் ஓய்வுநாட்களில் வியாதியஸ்தரைக் குணமாக்கினார் என்பதற்கு இன்னுமொரு காரணம் உண்டு. அவர் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டு



சிலுவையில் அறையப்படுவார் என்பது அவருக்கு தெரிந்திருந்தது எனவே உலகத்தின் பாவத்திற்காக தன்னை ஒரு பரிசுத்த பலியாக பிதாவிற்கு அர்ப்பணிக்க விரும்பினார் (யோவான் **1:29**). இது நடந்தே ஆகவேண்டும். ஓய்வு நாளிலே பிணியாளிகளைக் குணமாக்கியது இயேசுவை யூதர்கள் புறக்கணிக்கவும் பின்னர் அவரைச் சிலுவையில் அறையவும் ஒரு காரணமாயிற்று.

**ஒரு கடைசி வார்த்தை:-** யோவான் 5 ஆம் அதிகாரத்தின் பின்பகுதியில் விளக்கப்பட்டிருப்பது, இயேசு இப்போது சுகமாக உள்ளவனைத் தேவாலயத்தில் கண்டு *‘‘அதிக கேடானது ஒன்றும் உனக்கு வராதபடி இனி பாவம் செய்யாதே”* என்றார். இயேசுவே அவனைக் குணப்படுத்தினார் என்பது வெளியாகி அவர்மீது வழக்கமான எதிர்ப்புகள் எழும்பின. அவர் தன்னை எதிர்த்தவர்களாலும், தன் வார்த்தைகளைக் கரிசனையுடன் கேட்ட மக்களாலும் சூழப்பட்டு, அவருக்கும் பிதாவுக்கும் உள்ள நெருக்கமான உறவைக் குறித்தும் அவருக்குத் தேவன் தந்துள்ள அதிசயமான வல்லமையினால் அவரால் செய்யக் கூடியவற்றைக் குறித்தும் ஒரு உன்னதமான சொற்பொழிவாற்றி, மற்றெல்லா காரியங்களோடு இதையும் கூறினார். *“இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்” (யோவான் 5:28-29)*.

இதில் அறிந்துக் கொள்வது என்னவெனில் நன்மை செய்தவர்கள் இயேசு திரும்பவும் வந்து சீக்கிரத்தில் நிர்மாணிக்கப்போகும் தேவனுடைய ராஜ்யத்தில் ஆயிரம் ஆண்டுகள் ஒய்வு நாளின் ஒய்வை அனுபவிப்பர். - **ரால்ப் க்ரீன்.**

**ஓய்வு நாள் கொண்டாட்டம் :-** இயேசு யாரையாவது குணமாக்கின போதும், தமது சீடர்கள் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து உண்ணுமாறு அனுமதித்த போதும் ஓய்வுநாளின் கொண்டாட்டத்தைப் பற்றிய சாராம்சத்தின் உண்மையை நமக்குக் காண்பித்தார். அந்த நாள் துதிக்கின்ற மற்றும் உன்னத மான தேவனோடு ஒரு உண்மையான உறவிற்காக நன்றிசெலுத்துகின்ற ஒரு நாளாகும். அந்த நாள் எதை தெரிவிக்கின்றது என்றால், ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதேயன்றி, என்பதையும் மற்றபடி அல்ல. மேலும் எல்லாவற்றின் மேலும் தேவனே உயர்ந்தவர். அவர் மக்களிடம் உள்ள விசேஷித்த உறவை அங்கீகரிக்கும் ஒரு நாளாகும்.

**டேவிட் நைட்டிங்கேல் - வந்து பாருங்கள்**